# Chapter 5
# காகமும் நாகமும்

---

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

**கேள்வி** 1.
காகம் வாழும்.
(அ) கூட்டில்
(ஆ) வீட்டில்
(இ) புற்றில்
(ஈ) மண்ணில்
**விடை:**
(அ) கூட்டில்

**கேள்வி** 2.
நண்பர்கள் இச்சொல்லின் எதிர்ச்சொல்.
(அ) அன்பானவர்கள்
(ஆ) உறவினர்கள்
(இ) பகைவர்கள்
(ஈ) நெருங்கியவர்கள்
**விடை:**
(இ) பகைவர்கள்

**கேள்வி** 3.
முத்துமாலை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.
(அ) முத்து + மாலை
(ஆ) முத்தும் + மாலை
(இ) முத்தும் + ஆலை
(ஈ) முத்து + மலை
**விடை:**
(அ) முத்து + மாலை

**கேள்வி** 4.
மரம் + பொந்து இதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது.
(அ) மரம்பொந்து
(ஆ) மரப்பொந்து

(இ) மரப்பந்து
(ஈ) மரபொந்து
**விடை:**
(ஆ) மரப்பொந்து

## பக்கம் 33

வினாக்களுக்கு விடையளிக்க.

**கேள்வி** 1.
காகத்தின் முட்டைகளைப் பாம்பு என்ன செய்தது?
**விடை:**
காகத்தின் முட்டைகளைப் பாம்பு உடைத்து விட்டது.

**கேள்வி** 2.
பாம்பை அழிப்பதற்காகக் காகம் யாரிடம் ஆலோசனை கேட்டது?
**விடை:**
பாம்பை அழிப்பதற்காகக் காகம் நரியிடம் ஆலோசனை கேட்டது.

**கேள்வி** 3.
“காகமும் நாகமும்” கதை உணர்த்தும் நீதி என்ன?
**விடை:**
நாம் பிறருக்குத் தீங்கு செய்யாமல் வாழ வேண்டும்.

## புதிருக்குப் பொருத்தமான படத்தைப் பொருத்துக.

**கேள்வி** 1.

நான் ஒரு வீட்டு விலங்கு;
இலை, தழைகளை உண்பேன். நான் யார்?
**விடை:**
ஆடு

**கேள்வி** 2.



மரத்திற்கு மரம் தாவுவேன்;
வாழைப்பழம் விரும்பி உண்பேன். நான் யார்?

**விடை:**
குரங்கு

**கேள்வி** 3.



கரும்பே எனக்கு உணவாகும்
கருமை எனது நிறமாகும் – நான் யார்?

**விடை:**
யானை

## முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தித் தொடர் உருவாக்குக.

**கேள்வி** 1.
ஒன்று கொக்கு இருந்தது குளக்கரையில்

______________________

**விடை:**
குளக்கரையில் கொக்கு ஒன்று இருந்தது.

**கேள்வி** 2.
எண்ணியது சாப்பிட மீன்களைச்

______________________

**விடை:**
மீன்களைச் சாப்பிட எண்ணியது.

**கேள்வி** 3.
அனைத்தும் சென்றன விளையாடிச் ______________________


**விடை:**
அனைத்தும் விளையாடிச் சென்றன.

## பக்கம் 34

எந்த உயிரினத்திற்கு என்ன பண்பு?

| உயிரினம் | பண்பு |
| --- | --- |
|  | ஒற்றுமை |
|  | சுறுசுறுப்பு |
|  | கூட்டமாக வாழும் |
|  | நன்றியுணர்வு |

**விடை:**




## மொழி விளையாட்டு

ஒவ்வோர் எழுத்தாகச் சேர்ப்போமா?

1. தா

    தாய்

    தாய்மை

2. வா

    ________

    ________

3 தூ

    ________

    ________

4 கா

    ________

    ________

**விடை:**

1. தா
   தாய்
   தாய்மை

2. வா
   வாய்
   வாய்மை

3. தூ
   தூண்
   தூண்டு

4. கா
   காசி
   காசினி

பெயர் எது? செயல் எது?

| | | பெயர் | செயல் |
|---|---|---|---|
| 1. | குதிரை வேகமாக ஓடியது | ______________ | ___________ |
| 2. | ஆசிரியர் பாடம் நடத்தினார் | ______________ | ___________ |
| 3. | குழந்தை சிரித்தது | ______________ | ___________ |

**விடை:**

| | | பெயர் | செயல் |
|---|---|---|---|
| 1. | குதிரை வேகமாக ஓடியது | குதிரை | ஓடியது |
| 2. | ஆசிரியர் பாடம் நடத்தினார் | ஆசிரியர் | நடத்தினார் |
| 3. | குழந்தை சிரித்தது | குழந்தை | சிரித்தது |